


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில் முதற்கட்டமாக பல்வேறு மாவட்டங்களில் 2002.21 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கி, தங்களது நீண்ட கால பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 10 பயனாளிகள் சந்தித்து, மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியின் போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ். சமீரன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.10.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு தலா ரூ.10,000/க்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.10.2024) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய அரசின் "தேசிய நல்லாசிரியர் விருது" பெற்ற வேலூர் மாவட்டம், இராஜகுப்பம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் இரா. கோபிநாத் குடும்பத்தினருடன் சந்தித்து, விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. எஸ். மதுமதி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.10.2024) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய அரசின் "தேசிய நல்லாசிரியர் விருது" பெற்ற மதுரை, இலட்சுமிபுரம், டி.வி.எஸ் மேல்நிலைப் பள்ளியின் மேல்நிலை தொழிற்கல்வி ஆசிரியர் நிலை – 1 இரா.சே. முரளிதரன் குடும்பத்தினருடன் சந்தித்து, விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. எஸ். மதுமதி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.10.2024) சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, அதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், துணை முதலமைச்சரின் செயலாளர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, பேரிடர் மேலாண்மை இயக்குநர் வ.மோகனச்சந்திரன், உள்ளிட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.




நேற்று (04.10.2024) சென்னை, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைகக் கழகத்தின் பதினான்காவது பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறப்பு விருந்தினர் பத்ம ஸ்ரீ திருமதி. அனிதா பால்துரை, துணைவேந்தர் பேராசிரியர் மு.சுந்தர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருக்கோயில்கள் அர்ச்சகர்களின் மகன் - மகள்களின் மேற்படிப்புக்கு கல்வி உதவித் தொகை:

# 500 மாணவர்களுக்கு - ரூ.50 லட்சத்திற்கான வரைவோலைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக். 5 -

ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.50 இலட்சத்திற்கான வங்கி வரைவோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.10.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு தலா ரூ.10,000/க்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களின் நலன்களை பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களுக்கு தினசரி பூசைகள் நடத்திட வழங்கப்பட்ட வைப்பு நிதி ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு, 12,959 திருக்கோயில்களுக்கு ஒரு தவணையில் ரூ.130 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த 3 ஆண்டுகளில் 4,041 நிதி வசதியற்ற திருக்கோயில்கள் ஒருகால பூசைத் திட்டத்தில் இணைக்கப்பட்டு, தற்போது 17,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக அரசு நிதி ரூ.210.41 கோடி வழங்கப்பட்டுள்ளதோடு, அத்திருக்கோயில்களின் மின் கட்டணத்திற்காக ரூ.6 கோடியில் மைய நிதி ஏற்படுத்தப்பட்டு மின் கட்டணம் துறையின் மூலம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு முதன் முறையாக மாதந்தோறும் ரூ.1,000/ ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

2024 - 2025 ஆம் நிதி யாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் நலன் கருதி, இவ்வாண்டு 500 மாணவர்களுக்கு மேற்படிப்பிற்காக தலா ரூ.10,000/ கல்வி உதவித் தொகை வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திடும் வகையில், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்காக பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி மேம்பாட்டு மைய நிதி மூலம் கல்வி உதவித் தொகையினை 500 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு ரூ.10,000/க்கான வங்கி வரைவோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று வழங்கினார்.

இதன்மூலம் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற உயர்கல்வி பயிலும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் பயன்பெறுவர். கடந்தாண்டு இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.11.2023 அன்று 400 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன்,1 இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! நடிகர் பிரகாஷ்ராஜ் முன்னிலை!

# திருச்சி சிவா எம்.பி.யின் நூல்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

## அமைச்சர் துரைமுருகன் – கவிப்பேரரசு வைரமுத்து – பேரா.சுப.வீரபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, அக். 5-

திருச்சி சிவா எம்.பி. நூல்கள் வெளியீட்டு விழா இன்று (5.10.2024 - சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார். திரைப்பட நடிகர் பிரகாஷ்ராஜ் விழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

இந்நூலின் முதல் பிரதியை கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில் கவிப்பேரரசு வைரமுத்து, திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவரும், நூலாசிரியருமான திருச்சி சிவா எம்.பி. ஏற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கவிஞர் நெல்லை ஜெயந்தா தொகுத்து வழங்குகிறார்.

### மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை! பி.ஸ்ரீராமுலு எம்.சி. தலைமை!

# சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்குகிறார்!

சென்னை, அக்.5-

சென்னை கிழக்கு மாவட்டம், விவசாய தொழிலாளர் அணி துறைமுகம் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்11வது நிகழ்ச்சியாக "சுமப்பவர் மனதை இளைப்பாற்றுவோம்! சொன்னதைச் செய்து நிலைமாற்றுவோம்! என்ற தலைப்பில் சுமை தூக்கும் தொழிலார்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 06.10.2024, ஞாயிற்றுக் கிழமை, காலை 10.00 மணியளவில், சென்னை, ஏழுகிணறு, குளோப் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் 5வது மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட் ஆசாத் எம்.சி, என்.பி.எம். சேக்அப்துல்லா, எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், இரா. கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், எம்.வினாயகம், எம்.இப்ராஹிம்கனி, பா.பிரதீப்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

துறைமுகம் மேற்கு/ கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி. சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன். துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: பா.கதிரவன், மா. ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே. பா.பிரபாகரன், டி.சதீஷ் குமார், கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன். மாமன்ற உறப்பினர்கள்: வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ்ஜெயின் எம்.சி, எல்.நவின் எம்.சி. ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் மேயர் பிரியா ராஜன், தாயகம் கவி, எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, கே.எஸ்.இரவிச்சந்திரன் முன்னாள் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன் முன்னாள் எம்.எல்.ஏ., க.பிரபு. மாநில நிர்வாகிகள்: சே.சந்துரு, பி.கே.மூர்த்தி எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், தமிழன் பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், பருதிஇளம் சுருதி எம்.சி. மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, மண்டலகுழு தலைவர்கள்: கூ.பி.ஜெயின் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, சொ.வேலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜே. துளசிங்கம், பி.உதயசங்கர், ரமேஷ்(எ) நீலகண்டன், டி.வி.செம்மொழி, சாவித்திரி எ வீரராகவன், டாக்டர். ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி.

மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர் / துணை அமைப்பாளர்கள்: டி. லோகேஷ், ஜே.பாலமுருகன், க.வினோத், ஜி.ஜே. பிரபு, எஸ்.தனசேகர், ஆர். டி.சங்கர்நானா, வானவில்விஜய், நா.துலுக்காணம், எல். பி.எப்.மோகன், ஜி.தாமோதரன், சுதாதீனதயாயன், ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, துரைகண்ணன், எம்.பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், ஆர்.எஸ்.சித்திக் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.